யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச சபை
22 FEB 1997

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 10 வெள்ளிக்கிழமை (21-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 86

## உள்ளூராட்சித் தேர்தலையொட்டி
# வன்முறைச் சம்பவங்கள்
# தென் பகுதியில் அதிகரிப்பு!

## படையினர் உஷார் நிலையில்

கொழும்பு, பெப்ரவரி 21

**உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. ஆனால் தெற்கில் முன் எப்போதுமில்லாதவாறு தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**நேற்று நள்ளிரவு வரையான 24 மணி நேரத்தில் மட்டும் நாட்டில் ஒன்பது தேர்தல் அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.**

காலி மாவட்டம், நாகொடப் பகுதியில் நேற்றுக் கடைசியாக இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் ஐ. தே. க. ஆதரவாளர் ஒருவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளரால் இவர் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெலவின் படுகொலைச் சம்பவத்தை அடுத்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும்

(8 ஆம் பக்கம் பார்க்க)





அப்ப பொலீஸாரின் திறமையைப் பரிசோதித்துப் பார்த்திருக்கிறார் போல!

## கப்பலில் பயணம் செய்யவிருந்த பெண்உட்பட நால்வர் கைது

### திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை, பெப். 21

கடந்த செவ்வாய்க்கிழமை வடபகுதிக்கு கப்பல் மூலம் பயணம் செய்ய விருந்தபெண் ஒருவரும், 3 இளைஞர்களும் திருமலையில் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

தாரகி கப்பல் மூலம் பயணம் செய்வதற்காக இவர்களின் பொதிகளைசோதனையிட்ட பொலீஸார் அந்தப் பெண்ணின் பொதியில் விடுதலைப் புலிகளுக்கு பணம் செலுத்தியதாகக் கூறப்படும் பற்றுச்சீட்டை கண்டெடுத்தனர், என்று கூறப்படுகிறது.

அதையடுத்து அந்தப்பெண்ணுடன் வந்த 3இளைஞர்களையும் பொலீஸார் கைது செய்தனர்.

அதேநேரம் அந்தப் பெண்ணிடம் 2 லட்சம் ரூபா இருந்ததாகவும் கூறப்படுகிறது.

## பரீட்சை முடிவு திங்கள் வெளிவரும்

கொழும்பு, பெப். 21

கடந்த செப்ரெம்பர்மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (உயர் தர) பரீட்சையின் முடிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார். (இ-3)

# தேடப்பட்டுவந்த புஞ்சிநிலமே
# நேற்று நீதிமன்றத்தில் சரண்

கொழும்பு, பெப். 21

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெல கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான சுஸந்த புஞ்சிநிலமே கோட்டை மேலதிக நீதிவான் ஜெயந்த டயஸ் நாணயக்கார முன்னிலையில் நேற்று சரணடைந்தார்.

இரத்தினபுரி மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரான இவர் தனது முகத்தில் இருந்த தாடியை நீக்கி உருவமைப்பில் மாற்றங்களைச் செய்த நிலையில் சட்டத்தரணி திருமதி ஸ்ரீமனி பத்தவெல ஊடாக சரண் அடைந்தார்.

இம்மாதம் 11 ஆம் திகதி முதல் தலைமறைவாகியிருந்த இவர் பற்றி தகவல் தருவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனப் பொலீஸார் தெரிவித்திருந்தனர்.

இவருடன் தேடப்பட்டு வந்த இரத்தினபுரி மாநகர முன்னாள் ஐ. தே. க. மேயர் மகிந்த ரட்ணதிலக கடந்த ஞாயிற்றுக்கிழமை சரண

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் 4 இலங்கையர்கள் துப்பாக்கிச் சூட்டில் காயம்

கொழும்பு, பெப். 21

கனடாவில் கடந்த வாரங்களில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 இலங்கைத் தமிழர்கள் காயமடைந்தனர்.

கனடாவில் உள்ள காபரோ நகரில் கிறீன்கிறஸ் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

பசுபதி விலாஸ் என்ற உணவு விடுதிக்குள் திடீரென நுழைந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதே அந்த இருவரும் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நடந்து 15 நிமிட நேரத்தின் பின்னர் கென்னடி வீதியில் பஸ் நிலையத்தில் நின்ற இரு தமிழர்களை அந்த நபர்கள் சுட்டுக் காயப்படுத்தினர்.

இவர்கள் சென்ற வாகனத்தைப் பொலீஸார் துரத்திச் சென்ற போதும் இவர்கள் தப்பிவிட்டனர்.

பின்னர் வாகனமும், துப்பாக்கியும் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்த நபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடமும் இதே போன்ற சம்பவங்கள் கனடாவில் நடந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## துப்பாக்கிச் சூட்டு காயத்துடன் 2 சடலங்கள்

யாழ்ப்பாணம், பெப். 21

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது உயிரிழந்ததாக, இனந்தெரியாத இரு இளைஞர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சாவகச்சேரி பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டன.

சடலங்களின் ஒன்றின் தலையிலும், மற்றதின் வயிற்றிலும் காயங்கள் காணப்பட்டன.

சடலங்கள் இனங் காண்பதற்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன. (இ-15)

## ஐ. தே. கட்சி எம்.பி வீட்டில் முன்னாள் இராணுவத் தளபதி

தலைமறைவாகியிருந்த இரத்தினபுரி மாவட்ட எம்.பியான புஞ்சிநிலமேயைக் கண்டு பிடிக்க கொழும்பிலுள்ள ஐ. தே. கட்சி எம். பி ஒருவரின் வீட்டை சோதனையிடப் பொலீஸார் சென்ற போது அங்கு முன்னாள் இராணுவத் தளபதி இருப்பதைக் கண்டனராம்.

அந்த முன்னாள் இராணுவத் தளபதியிடம் பொலீஸார் விசாரித்த போது, எம். பிக்கு பாதுகாப்பு ஆலோசனை வழங்குவதற்காக தாம் வந்திருப்பதாகக் கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர் அவ்வீட்டில் இருந்தது சி ஐ. டியினருக்கு பல ஊகங்களை எழுப்பியுள்ளன என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (இ-3)

## படையினரின் தேடுதல் வவுனியாவில் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 21

வவுனியா நகரில் படையினரின் திடீர் சோதனைகள் அதிகாரித்துள்ளன.

வவுனியா நகருக்குள் புலிகள் தொலைத் தொடர்பு மையம் இருப்பதாக படையினர் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இந்த மையம் எங்கிருந்து செயற்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்கும், முயற்சியில் படையினர் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இதற்காக வவுனியா நகரில் திடீர் தேடுதல்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

## புஞ்சிநிலமேயின் சரண் நீதித்துறையில் சர்ச்சை

பொலீஸாரால் தேடப்பட்டுவந்தவரான நாடாளுமன்ற உறுப்பினர் புஞ்சிநிலமேயின் மெய்ப்பாதுகாப்பாளர்களான சிசிர குமார வீரசேகராவும் கே. கே. டி. புண்யபாலாவும் கடந்த 18 ஆம் திகதி சட்டத்தரணிகளான திருமதி சிறிமனி பத்தேவெல மற்றும் ஜயந்த டயஸ் நாணயக்காரா மூலம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்தனர் அல்லவா?

ஆனால் புஞ்சிநிலமே நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த போது ஜயந்த டயஸ் நாணயக்காராவே பதில் நீதவானாக கடமையாற்றினார் என்று தெரிவிக்கப்படுகின்றது

எதிரிகளுக்காக ஆஜரான சட்டத்தரணி ஒருவர் அதே வழக்குத் தொடர்பாக ஏதோ ஒருவகையில் நீதிமன்றக் கடமையில் ஈடுபடுவது நீதித்துறையின் பாரம்பரிய பண்புகளை பாதிப்பதாக அமைந்துள்ளது என்ற கருத்து சட்டத்தரணிகளிடையே நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி வரவேற்கின்றோம்

கூட்டுறவுக்கு நல்ல ஓர் எதிர்காலத்தை உருவாக்க கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்று வந்திருக்கும்

**திரு. எஸ். கே. சண்முகநாதன்**

அவர்களை கூட்டுறவு வளம் பெற வாழ்த்தி வரவேற்பதோடு, அவரின் பணி சிறந்து மிளிர இறைவன் கருணை என்றும் கிடைக்க வேண்டி நிற்பவர்கள்.

**றோயல் விளையாட்டுக் கழகம், சுன்னாகம்.**

(45420)

உ

ஓம் சிவசக்தி

## கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள்
# நூல் வெளியீடு

மெய்யன்பர்களே!

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்களால் இயற்றப்பெற்ற கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நிகழும் தாது வருடம் மாசிமாதம் 11ஆம் திகதி **(22-2-1997)** சனிக்கிழமை (மாசிமகம்) பிற்பகல் 2-00 மணிக்கு ஆரம்பமாகும். அத்தருணம் அன்பர்கள் அனைவரும் சமுகமளித்துச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. வெளியீட்டுரை:
   கலாநிதி பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயா அவர்கள்
   (விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
2. சிறப்புரை;
   யாழ். இந்து சமய பேரவை நிர்வாகிகளும், வேறுபல பெரியார்களும்.
3. இசைக்கச்சேரி:
   சங்கீதபூஷணம் திரு.சு. கணபதிப்பிள்ளை அவர்கள் (கல்விப்பணிப்பாளர், இசைப்பகுதி, வடமாநிலம்)
4. பஜனைக்கச்சேரி:
   'கதாப்பிரசங்கவாரிதி' 'சைவநன்மணி'
   திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி குழுவினர் (தொல்புரம்)
5. முதற் பிரதி பெறல்:
   திரு. செ. சிவலிங்கம்
   சிற்றி காமென்ஸ் ஆடை தயாரிப்பு நிலையம் (இணுவில்)

**ஐ. கோ. சந்திரசேகரம்**
நூல் வெளியீட்டுச் சபை சார்பாக.

(45410)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சங்கீத ஆசிரியை

திருமதி தேவமனோகரியின் அன்புக் கணவர்

**திரு. மு. குலேந்திரகுமார்**

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

**பாடசாலை அபிவிருத்திச் சபை.**

நுணாவில் மேற்கு
அ.த.க. பாடசாலை,
சாவகச்சேரி.

(45416)

## யாழ். மாநகரசபை
# பொது அறிவித்தல்
# திருத்தம்

உதயன் பத்திரிகையில் 18 02-1997 இல் வெளியான பொது அறிவித்தலை, யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான நவீனசந்தைக் கடைகளையும், ஏனைய கடைகளையும் கேள்வி அடிப்படையில் வாடகை உரிமையாசப் பெற்றுக்கொண்டவர்கள் எனத் திருத்தி வாசித்துக்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப் படுகிறது.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1997-02-20

(சி/176)

# கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவியான

**செல்வி சுமித்திரா சண்முகநாதன்**

அவர்களின் தந்தையான

**இராமுப்பிள்ளை சண்முகநாதன்**

அவர்களின் திடீர்மரணத்தையிட்டு அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

**ஆண்டு 12B விஞ்ஞானபிரிவு மாணவிகள்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

(45415)

## படையினருக்கு ஆள்திரட்ட நேர்முகப்பரீட்சை

புத்தளப் பகுதியில் நிலை கொண்டுள்ள 18ஆவது படையணிக்கு புதிதாக ஆள்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகள் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை புத்தளத்தில் பல இடங்களில் இந்த நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறும். (இ-150-3)

## பதிவு குறித்த கடிதங்கள்

யாழ். மாவட்டத்திலிருந்து இளைஞர் விவகார விளையாட்டுத்துறைகிராமிய அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்த பட்டதாரிகளில் ஒரு பகுதியினர் அமைச்சினால் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி அமைச்சினால் பதிவு செய்யப்பட்டதற்கான கடிதங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உரியவர்கள் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(இ-4)

## கட்டடம் இடிந்து 50 மாணவிகள் காயம்

கொழும்பு, பெப். 21

மொறட்டுவையிலுள்ள கன்னியர் மடம் பாடசாலை மாடிக்கட்டடம் கடந்த புதன் நண்பகல் திடீரென இடிந்து விழுந்ததால் மேல் மாடியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த 50 மாணவிகள் காயமடைந்தனர்.

கடுமையான காயங்களுக்கு உட்பட்ட 10 மாணவிகள் கொழும்பு பொது மருத்துவ மனையிலும் ஏனையோர் பாணந்துறை, லுணாவ, களுபோவில மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-10)


**A/L 99, 98**

**இந்துநாகரிகம்**

ஆரம்பம்: 23-02-97
ஞாயிறு பி.ப. 2-30

ஆசிரியர்;
திரு. ஜோதீஸ்வரன்
B. A. (Hons)

அனுமதிகளைப்பெற்றுக் கொள்ளவும்.

**COLLEGE OF COMMERCE**

பெருமாள்கோயில் அருகில்
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(45417)

**A/L 98, 99**

**இந்துநாகரிகம்**
**திரு. நித்தி**
**நாடகமும் அரங்கியலும்**
**திரு. ஜோண்சன்.**

**SHAMROCK**

யா/ ஈச்சமோட்டை வீதி.

(45421)

# தேவை

பங்காளர்/ உதவி வைத்தியர் (Locum) தேவை.

காலை 7 - 9 மணி வரை சந்திக்கலாம்.

**வதனா மருந்தகம்,**
பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

(சி/178)


# தேசிய பாதுகாப்பு நிதிக்கென 'ஸ்ரிக்கர்' விற்கும் மோசடி
## கண்டியில் அறுவர் கைது

கொழும்பு, பெப். 21

தேசிய பாதுகாப்பு நிதிக்கென 'ஸ்ரிக்கர்' தயாரித்து விற்பனை செய்த மோசடி ஒன்றைக் கண்டிப் பொலீஸார் கண்டு பிடித்தனர்.

இந்த மோசடி தொடர்பாக பொலீஸார் 6 பேரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இராணுவ தொண்டர் படையைச் சேர்ந்தவர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதுபோன்ற மோசடி சம்பவங்கள் நாவலப்பிட்டி, கம்பளைப் பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-150)

# கண்ணீர் அஞ்சலி

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

**(தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பளைப் பிரிவு)**

மக்கள் சேவை மகேசன் சேவையெனத் துன்புற்ற மக்களுக்கு சேவையாற்றிய தலைவரின் மறைவு, எமக்கும், பளை மக்களுக்கும் பாரிய இழப்பாகும். அன்னாரின் மறைவால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**யாழ். கிளை நிர்வாகத்தினர்,**
**அங்கத்தவர்கள், தொண்டர்கள்,**
**பிரிவு நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள்,**
**இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்.**

(சி/177)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் மாணிக்கம்

மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி ஐயா கடைச் சந்தியடியில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் மாணிக்கம் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி, குமாரசாமி, இரகுநாதன், காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கணபதிப்பிள்ளை, மகேஸ்வரி, ருக்மணிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20 - 2 - 97 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**செல்வம் (பேரன்)**

அருள் விநாயகர் வர்த்தக நிலையம்;
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்,
சாவகச்சேரி.

(45404)

## பொன்னுத்துரை துரைச்சாமி

(இளைப்பாறிய C.T.B. நடத்துநர்)

அரியாலை புங்கன்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை துரைச்சாமி 20-02-97 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், றெஜினாருக்குமணிபாக்கியத்தின் அன்புச் சகோதரனும், கெங்காதரன், சத்தியபாமா, கஜேந்திரன், கேதுரங்கன், கேதீஸ்வரநாதன், சத்தியராணி, திருக்கேதீஸ்வரன், கிருபாகரன, குமணேந்திரன், சத்தியவேணி, சத்தியவாணி, சத்தியவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-02-97 வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செ.சண்முகலிங்கம்**
(மருமகன்)

இல.16 வில்வந்தெரு லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(45418)

## திருமதி மாணிக்கம் சரஸ்வதி

உரும்பிராய் வடக்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி மாணிக்கம் சரஸ்வதி 19- 02- 97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புமனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி, மற்றும் நற்குணம், யமுனா, அமிர்தாம்பாள், கருணாநிதி, ராசாத்தி, பற்பநாதன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20- 02- 97 பிற்பகல் 3. 00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

**மா. அமிர்தாம்பாள்**
(மகள்)

தற்போதைய முகவரி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(45406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன தலைவர் காலமானார்!

பீஜிங், பெப்ரவரி 21

**நவீன சீனாவின் சிற்பி என்று வர்ணிக்கப்படும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந் தலைவர் டெங் ஷி ஓ பிங் தனது 93 ஆவது வயதில் காலமானார்.**

**கடந்த பல மாதங்களாக கடும் நோய் வாய்ப்பட்டிருந்த பிங் நேற்று முன்தினம் இரவு சுவாசக் கோளாறு ஏற்பட்டு உயிர் நீத்ததாக சீனாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான "சின்குவா" அறிவித்தது.**

டெங் ஷி ஓ பிங்சின் மறைவுச் செய்தியை தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றே முதலில் வெளியிட்டது. அதன் பின்னரே சீனாவின் அதிகார பூர்வ செய்தி நிறுவனம் அவரின் மறைவுச் செய்தியை உறுதி செய்தது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் இருந்து ஒதுங்கிக் கொண்ட பிங் கடந்த மூன்று ஆண்டு காலமாக பொது நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தார்.

தலைவரின் மறைவையடுத்து சீனாவில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. மரணச் சடங்கு ஏற்பாடுகளைக் கவனிக்க 459 பேர் கொண்ட உயர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. (ஐ-10)

## பிங்கின் மரணச் சடங்குக்கு வெளிநாட்டவருக்கு அழைப்பில்லை

பீஜிங், பெப். 21

மறைந்த சீனத் தலைவர் டெங் ஷி ஓ பிங்கின் மரணச் சடங்குக்கு சீனாவின் சம்பிரதாய முறைப்படி வெளிநாட்டுத் தலைவர்கள் எவரும் அழைக்கப்பட மாட்டார்கள்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அரச அதிகாரிகளும், முப்படைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் மட்டுமே மரணச் சடங்குகளில் கலந்து கொள்வர். (ஐ-10)

## ஸயரில் சண்டையை நிறுத்த சமரச முயற்சியில் மண்டேலா!

லண்டன், பெப். 21

ஸயர் நாட்டு அரச பிரதிநிதிகளும், ஸயரின் கிழக்குப் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் போராளிகளின் பிரதிநிதிகளும் இவ்வாரம் சந்திக்கவுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் இந்தச்சந்திப்பு இடம்பெறும்.

இருதரப்பினரிடையேயும் போரை முடிவுக்குக்கொண்டு வர சமரச முயற்சியில் தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா ஈடுபட்டிருக்கிறார்.

பேச்சு நடத்துவதற்கான கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு இரு தரப்பினருமே தம்மிடம் கேட்டிருந்தனர் என்றும்—.

தாம் அதனை ஏற்றுக் கொண்டதாகவும் திரு. மண்டேலா தெரிவித்தார். (ஐ)

## உலகத் தலைவர்கள் அனுதாபம்

பீஜிங், பெப். 21

சீனத் தலைவரின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலர் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

''உலக அரங்கில் பிங் ஒரு அசாதாரணமானவர்'' என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தமது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

''திரு. பிங் சீன வரலாற்றின் மகத்தான மனிதர்'' என்று பிரெஞ்சு ஜனாதிபதி தமது செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரிட்டன், ஜேர்மனி, இந்தியா உட்பட மற்றும் பல நாடுகள் பெங்கின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

# உலக அரங்கில்

## இந்தியாவில் பொம்மை நகரம்

புதுடில்லி, பெப். 21

இந்தியாவின் முதலாவது பொம்மை நகரம் மத்தியப் பிரதேசத்தில் அமையவிருக்கிறது.

ஏற்றுமதிநோக்குடைய 150 பொம்மைதயாரிப்பு தொழிற்சாலைகள் இந்த நகரத்தில் அமைக்கப்படவுள்ளன.

## ஜெயலலிதாவுக்கு சத்திரசிகிச்சை

சென்னை, பெப். 21

முன்னாள் தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதா கடும் முதுகுவலி காரணமாக தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இன்னும்சிலதினங்களில்அவர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## 80 பேர் கைது!

பதற்றம் நீடித்துவரும் திரிபுரா மாநிலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரமாக்கியுள்ள பொலீஸார் சந்தேகத்தின் பேரில் 80 பேரைக்கைது செய்துள்ளனர்.

கடந்த சனியன்று இங்கு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 31 பொதுமக்கள் பலியானது தெரிந்ததே.

## 70 வருடகால அரசியல் வாழ்க்கை

மறைந்த தலைவர் பிங் தனது 20 ஆவது வயதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவரானார். பின்னர் அந் நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுச் சண்டையில் முக்கிய படைத்தளபதியாக விளங்கினார். உள்நாட்டுப் போரின் முடிவில் 1949 இல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாஓ - சே - துங்கின் தலைமையில் சீனாவில் ஆட்சியை அமைத்தது.

அதன் பின்னர் முதலாளித்துவத்தை ஆதரிக்கிறார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மாஓ - சே - துங்கால் இருமுறை பிங் ஒதுக்கப்பட்டார்.

மாஓ - சே - துங்கின் மரணத்தின் பின்னர் மீண்டும் உயர் பதவிக்கு வந்த பிங் 1976 இல் சீனப் பொருளாதாரப் புனரமைப்பை மேற்கொண்டார்.

பனழமையில் ஊறிப்போன சமுதாயப் பழக்க வழக்கங்களை மாற்றுவது அவருக்குக் கடினமான பணியாகவே இருந்தது. இருந்த போதிலும் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் வியக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தினார்.

சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பல ஆண்டுகளாக இருந்து வந்த முறுகல் நிலையைத் தணிப்பதிலும் பிங் வெற்றியீட்டினார்.

1989 இல் அப்போதைய ரஷ்யப் பிரதமர் கொர்பச்சேவின் வரலாற்றுச் சிறப்புமிக்க சீன விஜயத்துக்கும் காரணமாக விளங்கியவர் பிங்.

இம்முயற்சிகள் அவரது இராஜ தந்திரத்திற்குக் கிடைத்த வெற்றிகள் எனலாம்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் சீனாவின் புகழ்பெற்ற தியனன்மென் சதுக்கத்தில் கூடி தங்களுக்கு அதிக ஜனநாயக உரிமைகள் வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஜனநாயக உரிமை வேண்டி ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் டெங் ஷி ஓ பிங்கின் சர்வாதிகார முடிவை எதிர்கொள்ள நேர்ந்தது.

மாணவர்களின் உரிமைப் போராட்டத்தை அடக்குமாறு இராணுவத்துக்குக் கட்டளையிட்டார். ஆர்ப்பாட்டத்தை அடக்கும் போர்வையில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அன்றுதான் பிங்கின் அரசியல் வாழ்வின் சரிவு ஆரம்பித்தது. 1989 இல் அரசியலில் மற்றவர்களுக்கு வழிவிட்டு தான் ஒதுங்குவது எனத் தீர்மானித்தார்,

அவர் அரசியலில் இருந்து ஒதுங்கினாலும் சீனாவில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் பரந்த அளவிலும் பயனுள்ள விதத்திலும் அமைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தார் .

இப்போது பிங் மரணமடைந்து விட்டார். அவரைக் கடுமையாக விமர்சித்தவர்களுக்கும் அதிக அரசியல் உரிமை வழங்கப்படுவதற்கு ஆதரவானவர்களுக்கும் பிங்கின் மறைவு ஒரு வெற்றிடத்தையே உருவாக்கியுள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் சீனாவையும் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கக்கூடிய ஆற்றல் தற்போதுள்ள வேறு தலைவர்களுக்கு உண்டா என்பதே தற்போது சீனாவிலுள்ள பெரும்பாலான மக்களின் அங்கலாய்ப்பாக உள்ளது. (ஐ- 10)

## ஆந்திரா எண்ணெய் வயலில் தீ!

புதுடில்லி, பெப். 21

ஆந்திரா மாநிலத்தில் எண்ணெய் வயல்களில் பெரும் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் நிலவாயு கூட்டுத்தாபனத்தின்எண்ணெய்வயல்களில் ஏற்பட்ட இந்த திடீர்த் தீயை அணைப்பதில் தீயணைப்புப் படையினர் தொடர்ந்து போராடிவருகின்றனர்.

## சங்கானைப் பகுதி சம்பவம்: இராணுவ வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 21

கடந்த புதன்கிழமை சங்கானை கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:- 19 -0 2 - 97 காலை 7-30 மணியளவில் சங்கானை கிழக்கு மல்லாகம் சந்திக் கண்மையில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் மற்றும் கைக்குண்டுத் தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த 10 வயதுச் சிறுமி ஒருவர் சிகிச்சைக்காக பலாலி மருந்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பலத்த அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கும் அச்சிறுமி அதிர்ச்சி காரணமாக பேச முடியாத நிலையில் உள்ளார்.

இப்படி அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## மனையியல் இறுதிநாள் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 21

மகளிருக்கான குறுகிய கால மனைப்பொருளியல் பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணி முதல் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் நடைபெறவுள்ளன.

நவீன சிற்றுண்டி வகை தயாரித்தல், தையல் இயந்திரம் பராமரிக்கும்முறை, நடைமுறைச் சாத்தியமான மகளிர் செயற்பாடுகளை இனங்காணல், குழு நிலை ஆய்வு, மதிப்பீடும் சான்றிதழ் வழங்குதலும் ஆகிய நிகழ்வுகள் இன்று இடம் பெறவுள்ளன. (ஐ-4)

## பற்சிகிச்சை

நெடுந்தீவில் பதின்மூன்று வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் பற்சிகிச்சைகளையும், நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் வாய்ப்புற்றுநோய் தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொள்ள யாழ். சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

## தவக்காலச் சிந்தனை

**(10 ஆம்நாள் - 2 ஆவதுவெள்ளி)**

ஆலயங்களில் இன்று அவலக் குரல் கேட்கிறது. சமாதானத்துக்காக ஏங்கித் தவிக்கும் இன்றைய காலத்தில் தான் இறைவார்த்தையில் ஒரு செய்தி தரப்படுகிறது. ''நீ பீடத்தின் மேல் காணிக்கை செலுத்தவரும் பொழுது, உன் சகோதரனுக்கு உன் மீது மனத் தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால் அங்கேயே, பீடத்தின் முன் உனது காணிக்கையை வைத்து விட்டு முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்து கொள். பின் வந்து உன் காணிக்கையைச் செலுத்து''.

குற்றமுள்ள மனத்தில் அமைதி, சமாதானம் எப்படி நிலைக்கும்?, இவற்றின் வெளிப்பாடுகள்தானே பகைமைக்கும் மன அமைதி இன்மைக்கும் காலாகின்றன. உடைகளைத் தூய்மையாக்கிக் கொள்கின்றோம். உள்ளத்தைத் தூய்மையாக்க [illegible]

— [illegible]

## விமானம் வீழ்ந்த செய்தி தவறு என்று மறுப்பு

ஸ்ரீலங்கா விமானப் படையின் தானியங்கி உளவு விமானம் ஒன்று அண்மையில் அனுராதபுரம் இராணுவ முகாம் அருகே வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படும் செய்தியை மறுத்து பாதுகாப்பு அமைச்சு செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது

அப்படி உளவு விமானம் எதுவும் விழவில்லை என்று பாதுகாப்பு அமைச்சுச் செய்திக் குறிப்பு தெரிவிப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டது. (உ-3-150)

## சுண்டுக்குளி மகளிர் நூற்றாண்டு; சிறப்புற நடைபெற்ற விழா

யாழ்ப்பாணம், பெப். 21

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழா சமீபத்தில் மிகச் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

சென்ஜோன்ஸ் தேவாலயத்தில் அன்றைய தினம் காலை 9. 00 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனையும்— அதன் பின்னர் கல்லூரியில் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

விசேடமாக அமைக்கப்பட்டிருந்த அரங்கில் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 100என்ற இலக்க வடிவில் விளக்குகள் அமைக்கப்பட்டு அவை அதிபர், சிறப்புவிருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரால் ஒளியூட்டப்பட்டன.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் நிறுவுநர் மற்றும் அதிபர்களை நினைவு கூறும் வகையில் மகளிர் கல்லூரி மாணவிகளால் நடித்துக் காண்பிக்கப்பட்ட நாடகம் சிறப்பாக அமைந்திருந்தது.

யாழ்ப்பாண மக்களின் இன்றைய நிலை பற்றி எடுத்துக் கூறும் வகையில் கோலாட்ட நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெற்றது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

B. M. C. லொறி என்ஜின், கிறாங்கெட். L.D. வான் லொறி, வில்லுத்தகடு, றிம் என்பன பாவித்ததும், புதியனவும் விற்பனைக்கு உள்ளன மில்க்வைற். [சி/167]

### விற்பனையாகின்றது

ஆண்டு 9 க்குரிய வரலாறு· ஆக்கம்: கே. எஸ். முத்துலிங்கம் விலை ரூபா 30/- கிடைக்குமிடம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [45399]

உயர்தர வகுப்புக்குரிய தாவரவியல் நூல்- களைகள் ஆக்கம்: சந்திரசேகரன், விலை ரூபா 40/- கிடைக்குமிடம்: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [45400]

### வகுப்புகள்

கணிதம் ஆண்டு 6—11, ஆங்கிலம் ஆண்டு 6—11, பிரயோக கணிதம் A/L. வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: ஞானசம்பந்தன் B.Sc, 67, கல்லூரிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [9297]

### ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகள் தீர, விவாகத்தடை, கல்வித்தடை, தொழில் தடை தீர, ஆலோசனை வழங்கப்படும். தோஷபரிகாரங்கள் கூறப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். குருக்கள், 140, பருத்தித்துறைறோட், ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம். [45366)

### திருமண சேவை

சைவ போசனம் அல்லது சைவ போசனமாக மாறக்கூடிய ஆண். பெண் சாதக குறிப்புடன், விவரங்கள் தேவை. (வெளிநாட்டவரும் கவனிக்கப்படும்) இரகசியம் பேணப்படும். இது ஒரு துரித சேவை. இல 585, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (45297)

### காணவில்லை

ஊர்கலப்பு மாடு, நரையல் வெள்ளை நிறமுடைய பசுமாடு, 18-02-97 இல் காணாமற் போய்விட்டது. பிடித்துக் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். கை. திரிபுவனேஸ்வரன், இல. 35 புலவனார் வீதி, கல்வியன்காடு சந்தையடி, நல்லூர் யாழ்ப்பாணம். [45398]

### மெய்வல்லுநர் போட்டி

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1. மணிக்கு சுதுமலை அருள் மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறும். (இ)


## பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்

25, றக்கா வீதி, யாழ்ப்பாணம்

"கணக்கியல்"

**A/L 97**

கிரயவியல் பிரிவு II

(COSTING)

**ஆரம்பம்: 23-02-97**

ஞாயிறு 1-00 மணி

ஆசிரியர்:

திரு. S. D. J. சுதர்ஷன்

(45402)


### தேவை

ஐஸ்கிறீம் தயாரிக்கும் மெசின், குளிர்சாதனப் பெட்டிகள், ஜெனறேற்றர் உடன் தேவை. விற்பனைக்கு இருப்பின் உடன் தொடர்பு கொள்ளவும். றிக்கோ ஹோட்டல் 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [45403]

### தவறிவிட்டது

தர்மலிங்கம் கதிர்காமநாதன் ஆகிய எனது அடையாள அட்டை, இலக்கம் 611260075X. சுன்னாகம் K.K.S. வீதியில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் கிழக்கில் எனது இல்லத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். [9305]


## திருமணம் எப்போது?

**கணவன்/ மனைவி யார்? தொழில்?**

முதலியவற்றை அறிய நாடுங்கள்:

**★யோகி சோதிட நிலையம்★**

கணிப்பவர்:

சுண்டுக்குளி **க. யோகராசா**

(வானசாஸ்திரி, கணிதமேதை, பொறியியலாளர், நீர் நிலத்தியல் நிபுணர்)

186, கண்டி வீதி, சுண்டுக்குளி.

(45389)


## திருவள்ளுவர் குருபூசை

ஷெ வைபவம் அகில இலங்கைத் திருவள்ளுவர் கோட்டத்துடன் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் வழிபடுவோர் சங்கமும் இணைந்து **1997-02-24** ஆம் திகதி திங்கட்கிழமை பழைய நேரப்படி காலை 7-00 மணியிலிருந்து நடத்தப்படும்.

### நிகழ்ச்சி நிரல்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் முன்னுரை
3. திருக்குறள் முற்றும் ஓதல்
4. வித்துவான் சொக்கன் – திருக்குறள் ஆய்வுரை
5. திரு. ஆ. வடிவேலு - திருக்குறள் புதைபொருள்
6. திரு. சி. வாமதேவன்- வள்ளுவமும் பொதுநோக்கும்
7. செல்வன் ப. ரதீஸ் - குறளும் தலைவிதியும்
8. செல்வன் க. யோகநாதன் - நிலமகள் சிரித்தாள்
9. திரு. ச. இராகவானந்தன் (ஆசிரியர்) - பின்னுரை

விசேட பூசையும் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

தலைமை:

சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராசா குருக்கள்

**ஆ. வடிவேலு**
கௌரவ செயலாளர்
**அகில இலங்கை வள்ளுவர் கோட்டம்,**
**இலட்சுமணன் தோட்டம்,**
**தும்பளை, பருத்தித்துறை.**

**சி. வாமதேவன்**
செயலாளர்
**தும்பளை, நெல்லண்டை**
**ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில்**
**வழிபடுவோர் சங்கம்.** (45387)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு: 03 — 05 — 1921

உதிர்வு: 22 — 01 — 1997

### திருமதி சின்னமணி நடராசா
**(சக்கரை அம்மா)**

(காட்டுப்புலம், தொண்டமானாறு)

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (21-02-1997) நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அமரரது இறுதிக் கிரியைகளின் போது அருகிருந்து துக்கம் பகிர்ந்தோருக்கும், உடனிருந்து உதவியோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு அமரரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

**குடும்பத்தினர்.**

நுகவில், கரவெட்டி மேற்கு. (சி/157)

## இதய அஞ்சலி

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

எங்களுடன் ஒட்டி உறவாடி எமது இன்பதுன்பங்களில் பங்குபற்றிய பளை நகர கிராம அலுவலர் **கணபதிப்பிள்ளை பத்மநாதன்** அவர்கள் கடந்த 16-02-97 இல் எய்திய திடீர் மறைவையொட்டி எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**
**ஊழியர் நலன்புரிச்சங்கம்.**
**பிரதேச சபை தலைமையகம்,**
**பளை.** (சி-173)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்: 25 — 03 — 1943

மறைவு: 22 — 01 — 1997

### அமரர் கனகசபை கணேசன்
**(இலிகிதர், C.T.B.)**

ஒரு நொடியில் உங்கள் மறைவு
ஒவ்வொரு நொடியும் உங்கள் நினைவு.

**குடும்பத்தினர்.**

நெல்லியடி, கரவெட்டி. (சி/169)

## நீங்காத நினைவில் 91 ஆம் நாள்



### செல்வி தயாளினி கந்தையா

மலர்வு **09 - 06 - 1976**

உதிர்வு: **23 - 11 - 1996**

எங்கள் அருந்தவத்தால் வந்த நங்கையே
அன்புத் தாயளினியே
எமைவிட்டு இத்துணை காலத்தில் ஏகினியே
உன் அருங்குணத்தினை நாம்
எப்போதும் மறவோம்
கொடிய காலன் ஆகாய விமானவுருவிலா
உன்னைக் கொண்டு செல்ல வேண்டும்?
உன் அன்பான மொழியினையும் செயல்களையும்
என்றும் மறவோம்! மறவோம்!
தொண்ணூற்றொரு நாளன்று தொளாயிரம்
நாளாயினும்
மறவோம்! மறவோம்!

என்றும் உங்களையே நினைந்துருகும்
(தகப்பன்) **கந்தையா,**
(தாய்) **கமலாதேவி,**
**சகோதரர்கள் மற்றும் உறவினர், நண்பர்கள்.**

இன்று (21 – 02 1997) நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

காளி கோயில் வீதி,
வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை. (சி-172)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட கால கெரில்லா யுத்தம் ஒன்றுக்கு அடித்தளமிடும் "எடிபல" படை நடவடிக்கை

யாழ்ப்பாணக் குடா நாட்டில் கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைளை, 'பனங்காட்டு'ப் பிரதேச இராணுவ நடவடிக்கைகள் என்றே வர்ணிக்கமுடியும். ஏனெனில் திரும்புமிடமெல்லாம் நெடிதுயர்ந்த பனை மரங்கள் காணப்படும் குடா நாட்டுப் பிரதேசத்திலேயே 'சூரியக்கதிர்' என்ற பெயருடன் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டில்—தற்போது வவுனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள 'எடிபல'—அதாவது 'துணிச்சல் படை' என்ற இராணுவ நடவடிக்கை அடர்ந்த வன்னிக் காட்டுப் பிரதேசங்களை ஊடறுக்கும் நடவடிக்கையின் பரீட்சார்த்த முயற்சியாக அமைந்துள்ளது.

### பனங்காட்டில் இருந்து வன்னிக் காட்டுக்கு

எனவே ''பனங்காட்டிலிருந்து'' வன்னிக் காட்டுக்குத் தாவியதாகவே தற்போதைய 'எடிபல' இராணுவ நடவடிக்கை விளங்கியிருந்தது.

யாழ்ப்பாணக் குடா நாட்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் சுமார் ஐந்து வருடகாலம் வரை விடுதலைப் புலிகள் வைத்திருந்தனர்.

'சூரியக்கதிர்' இராணுவ நகர்வையடுத்து விடுதலைப் புலியினரின் பிரதான தளமாகவும், நடமாட்டத்துக்குரிய பிரதேசமாகவும் வன்னி வனாந்தரங்களே இருந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போது கூட வன்னிப் பகுதியை ஒரு முக்கிய கேந்திரப் பிரதேசமாகவே புலிகள் வைத்திருந்தனர்.

ஏனெனில், புலிகளது முக்கிய புகலிடமாகவும், அவர்கள் வளர்ச்சி பெற்ற பெரும் பாசறையாகவுமே வன்னிப் பிரதேசம் இருந்து வருகின்றது.

வன்னியில் கடந்த காலங்களில் பல முக்கிய வெற்றிகளைக் கூட புலிகள் ஈட்டியுள்ளனர்.

ரூபவாஹினியின் அஞ்சல் கோபுரம் அமைந்திருந்த கொக்காவில் இராணுவ முகாமைத் தகர்த்தமை, மாங்குளம், ஒட்டுசுட்டான், மண்கிண்டிமலை படை முகாம்களைத் தாக்கியழித்தமை என்பன புலிகளுக்குக் கிடைத்த வெற்றிகளாகும்.

இந்திய இராணுவம் கூட வன்னிக் காடுகளை ஊடுருவி, புலிகளது முகாம்களைத் தாக்குவதில் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

### இந்தியப் படை சந்தித்த தோல்வி

வன்னிப் பகுதியில் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனைப் பிடிக்கும் முயற்சியில் தோல்வி கண்டு, தமது இயலாமையை மறைக்க 'பிரபாகரன் இறந்துவிட்டார்' என்ற 'கட்டுக் கதை'யை இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் கட்ட விழ்த்தும் விட்டிருந்தனர்.

ஆனால் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அப்போது தமது வலக்கரமாக இருந்த மாத்தையா என்று அழைக்கப்பட்ட கோபாலசாமி மகேந்திரராஜாவுடனும், புலிகளின் அரசியல் முக்கியஸ்தர் யோகரட்ணம் யோகியுடனும் வன்னிக் காட்டினுள் 'வீடியோ' கமெரா முன்பாகத் தோன்றி இந்தியப் படையினரின் பிரசாரத்தை முறியடித்தார்.

இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த லெப்டினன்ட் ஜெனரல் திபீந்தர்சிங் தமது இலங்கை அனுபவம் பற்றி நூல் ஒன்றைக்கூட எழுதியிருந்தார்.

அந்த நூலில், புலிகளுடனான மோதல்களில், வன்னிப்பிரதேசத்தில் இந்தியப் படையினர் எதிர்கொண்ட அனுபவங்களை ஜெனரல் திபீந்தர்சிங் நிறையவே எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை அடைவதற்கு 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்குமிடையே தொடர்பை ஏற்படுத்த 'சத்ஜய' என்ற இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது.

### 45 மைல் நீள தரைப்பாதை

அடுத்து, கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையே தரைவழிப்பாதையைத் திறப்பதே தற்போது இடம்பெறும் 'துணிச்சல் படை' (எடிபல) என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையின் நோக்கமென்று அரசு அறிவித்துள்ளது.

கிளிநொச்சிக்கும், வவுனியாவுக்குமிடைப்பட்ட தூரம் சுமார் 45 மைல்களாகும். ஆனால் இரு புறமும் அடர்ந்த காடுகளைக் கொண்டதாகவே கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்குமிடையிலான நெடுஞ்சாலை காணப்படுகின்றது.

இந்தநெடுஞ்சாலையையண்டிய பிரதேசங்களில் கடந்த பல வருடங்களாக சனநடமாட்டம் என்பது பெரிதும் குறைந்து போயுள்ளது.

பத்துவருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கும். கொழும்புக்குமிடையே வீதிப் போக்குவரத்து மட்டுமல்ல, ரயில் போக்குவரத்துக்கூட வன்னிக்காடுகளுடாக இடம் பெற்றது.

ஆனால் இன்று யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்குமிடையே ரயில் ஓடியதற்கான தடயமே இல்லை.

### புலி வேட்டை

இந்நிலையில், ஆள் அரவமே அற்ற வன்னிக் காடுகளில் 'புலி வேட்டை'யைப் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

காட்டுப்புறங்களில் மோதல்கள் மிகவும் சிக்கலானவையாகும். இருசாராருமே மறைந்திருந்து தாக்கும் தந்திரத்தையே கானக யுத்தங்களில் மேற்கொள்ள வேண்டியிருக்கும். கெரில்லாக்கள் மறைந்திருக்கவும், சண்டையிடவும் காடுகள் மிக வசதியான பின்தளங்களாக உதவுகின்றன.

### வியட்நாம் அனுபவம்

வியட்நாமில் அமெரிக்காவினால் ஓர் உறுதியான வெற்றியைப் பெற முடியாமல் போனதற்கும் வியட்நாமிய காடுகளே பிரதான காரணமாக இருந்தன.

வியட்நாமியக் காடுகளுக்குள் ''வியட்கொங்'' கெரில்லாக்கள் நன்கு திட்டமிட்டுத் தமது தாக்குதல்களை அமெரிக்கர்களுக்கு எதிராக நடத்தியிருந்தனர்.

அமெரிக்கா பெருமளவில் அதிநவீன சாதனங்களைப் பயன்படுத்திய போதிலும் ''வியட்கொங்'' கெரில்லாக்களின் 'காட்டுத் தந்திர'ங்களுக்கு ஈடு கொடுப்பது கடினமாகவே இருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரை புலிகளுடனான மோதல்களின் மூலமே தமது வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் பெற்றுவரும் இலங்கை இராணுவம் புலிகளுக்கெதிராகவே எவ்வளவு தூரம் ஒரு காட்டு யுத்தத்தில் தாக்குப்பிடிக்க முடியும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

வன்னிக் காடுகளை ஊடுருவும் பரீட்சார்த்த நடவடிக்கையை கடந்த 49 ஆவது சுதந்திர தின வைபவத்தோடு படையினர் ஆரம்பித்தனர். ஆனால் கிழக்கில் பல வருடகாலமாகவே படையினருக்கும், புலிகளுக்குமிடையிலான மோதல்கள் காடும், காடு சார்ந்த இடங்களிலுமே இடம்பெற்று வருகின்றன.

இந்த மோதல்களில் படையினரால் கிழக்கில் விடுதலைப் புலிகளை முழு அளவில் முறியடிப்பது முடியாத காரியமாகவே இருந்து வருகின்றது.

வடக்கு — கிழக்கைப் பொறுத்தவரை, படைமுகாம்கள் அமைந்திருக்கும் பகுதி, படையினரின் நடமாட்டங்கள் என்பவை பற்றி புலிகள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

இதன் காரணமாகவே அவ்வப்போது படையினரது முகாம்கள் வடக்கிலும், கிழக்கிலும் பெரும் தாக்குதல்களுக்குள்ளாவதையும், ரோந்து செல்லும் படையினர் இழப்புக்களை எதிர்நோக்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆனால் புலிகளின் முகாம்களை முழுமையாக—பெருமளவு வெற்றியுடன்—படையினர் வடக்கு—கிழக்கின் காட்டுப்பகுதிகளுக்குள் கைப்பற்றியமை என்பது மிகமிக அரிதாகவேஇருக்கின்றது.

வடக்கு — கிழக்கில் ஏற்கனவே தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் பகுதிகளைப் பாதுகாப்பதோடு காடுகளில் புலிகளைத் தேடியழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது படையினருக்குப் பெரும் நெருக்கடியையே ஏற்படுத்தும்.

வன்னியில் 'துணிச்சல்படை' இராணுவ ஒப்பரேஷனை ஆரம்பித்துள்ள அதே சமயம் வடக்கு—கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவும் அரசு தயாராகின்றது.

எனவே ஒரு புறம் இராணுவ நடவடிக்கையும், மறுபுறம் தேர்தல் பிரசாரங்களும் நடைபெறுவதை அவதானிக்க முடிகின்றது.

( 6ஆம் பக்கம் பார்க்க)

# உயர்ந்த நிலையைப் பெறுவதற்கு கடவுளை உணர்ந்து வழிபடுங்கள்

(தருமபுர ஆதீனத்தின் 26 ஆவது குருமகா சந்நிதானம் வழங்கியது.)

நல்லனவற்றையும் தீயனவற்றையும் அறிந்துணரும் ஆற்றல் பெற்றுள்ள மனிதன் தனக்கு வாழ்த்த வாயையும் நினைக்க மட நெஞ்சையும் தாழ்த்தச் சென்னியையுந் தந்துள்ள இறைவனை உணர்ந்து வழிபட்டு உய்யும் நெறியை, மானுடப்பிறப்பின் பயனாகப் பெறும் போது தான் உயர்ந்த நிலையைப் பெறுகிறான். அப்பர் சுவாமிகள் இறைவனை வழிபடுவதற்கே இப்பிறவி வாய்த்துள்ளது என்ற உண்மையை,

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இம் மாநிலத்தே''

என்று அருளிச் செய்திருக்கின்றார்.

உலக வாழ்க்கையில் ஆன்மீக ஈடேற்றத்துக்குரிய முயற்சிகள் எதையும் மேற்கொள்ளாது, வாழ்நாளை வீண் நாளாக்குவோர் பலர். அவர்கள், மேலும் பல பிறவிகளை மாறி மாறி எடுத்து இறந்தும் பிறந்தும் வாழும் பிறவிச் சுழலிற்பட்டு அல்லல் உறுவோரே ஆவார்.

### உய்தி உண்டா?

உலகில் அறுபதாண்டுகளைப் பயனின்றிக் கழித்த ஒருவர் அப்பரடிகளைச் சந்தித்து, ''அப்பர் பெருமானே! இப்பிறப்பில் அடியேனுக்கு உய்தி கிடைக்குமா? இறந்த பிறகு எனக்கு வீடுபேறு கிடைக்குமா? கூறியருளுங்கள்'' என்று கேட்டார். அப்பரடிகள் அவரைப் பார்த்து, ''ஐயா! முதியவரே! இறந்தபிறகு உங்கள் உயிர் சுவர்க்கத்தையடையுமா? அல்லது நரகத்தையடையுமா? அல்லது வீடுபேற்றைப் பெறுமா? என்பதைக் கணித்தறிய உங்களிடம் ஐந்து கேள்விகள் கேட்க விரும்புகின்றேன். அதற்கு நீங்கள் அளிக்கும் விடையை வைத்துக்கொண்டு தான் உங்கள் கேள்விக்கு விடை சொல்ல வேண்டும்'' என்று கூறி முதற்கேள்வியை முதியவரிடங் கேட்டார்.

''இறைவன் திருநாமமாக விளங்குந் திருவைந்தெழுத்தை (ஸ்ரீபஞ்சாட்சரத்தை) உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எத்தனை முறை செபஞ் செய்திருப்பீர்கள்?'' என்பது முதற் கேள்வி.

அறுபதாண்டு உலகில் வாழ்ந்து சழித்த அம்முதியவர், அப்பரடிகளைப் பார்த்து, ''ஐந்தெழுத்தா! அது இன்னது என்பதையே இந் நாள்வரை அறியேன், ஐயனே!'' என்று விடையிறுத்தார்.

### ஞானக்கதிர்

அப்பர் சுவாமிகள் சிந்தித்தார். ''ஓர் ஆசாரியனை அடுத்து, பஞ்சாட்சர உபதேசம் பெற்று அதனை முறையாக ஒருவன் செபம் செய்வது அரிய செயலாகவும் இருக்கலாம். எல்லோரும் மேற்கொள்ளத்தக்க எளிய செயலாகவே மற்றொன்று கேட்போம்'' என்று திருவுள்ளத்து எண்ணி அடுத்த கேள்வியைக் கேட்டார்.

''இறைவனது அளவற்ற ஆற்றலையோ, அவன், உயிர்கட்கு வழங்கும் கருணையின் திறத்தையோ வியந்தும்' புகழ்ந்தும் மற்றவர்களிடம் உரையாடியதுஉண்டா?'' — என்பது இரண்டாவது கேள்வி.

தொகுப்பு:

**காரைநகர் வைத்தீஸ்வரக்குருக்கள்**

''அடிகளே! இந்நாள் வரை பயனின்றிப் பேசிப் பொழுது கழித்தேனேயொழிய, இறைவன் புகழை வாழ்த்தியோ அவர்திறம் விரித்தோயாரிடமும் எதுவும் பேசியதில்லை'' என்று இரண்டாவது கேள்விக்கு விடையிறுத்தார் முதியவர்.

''நாடோறுமோ அல்லது வாரம் ஒரு முறையோ அல்லது திருவிழாக் காலங்களிலோ திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்ததுண்டோ?'' என்று மூன்றாவது கேள்வியைக் கேட்டார் அப்பர்.

''திருக்கோயில், எங்கள் ஊருக்கு நடுவில் இருக்கிறது. ஆலயமணி, பூசை வேளைகளை ஊர் மக்களுக்கு இடைவிடாமல் தெரிவிக்கவுஞ் செய்யும். அப்படியிருந்தும் ஒரு நாளாவது திருக்கோயிலுக்குப் போய் வலம் வந்து வழிபடவில்லைச் சுவாமி!'' என்றார் முதியவர்.

பின்னர் ''வீட்டிலாவது ஒரு தெய்வத் திருவுருவமோ, படமோ வைத்து வழிபாடு செய்து வருகின்றீர்களா? நீராடி உண்பதற்கு முன் மலர் பறித்துச் சாத்தி வழிபட்டு உண்பதுண்டா?'' என்று கேட்டார் அப்பர் சுவாமிகள்.

நான்காவது கேள்விக்கும் ''இல்லை'' என்றே பதிலிறுத்தார் முதியவர்.

அப்பரடிகள், ''இந்தக் கேள்விக்காவது சிந்தித்து நல்ல விடை சொல்லுங்கள்'' என்று கூறி, அடுத்த கேள்வியைக் கேட்டார்.

சைவர்களாயிருப்பவர்கள் எல்லோரும் நாடோறும் திருவெண்ணீறு அணியத் தவறமாட்டார்களே. திருநீற்றின் பெருமையையோ அணிவதற்குரிய காரணத்தையோ அறியாதவர்கள் கூட திருநீறு உடலிலுள்ள பலவகை நோய்களையும் போக்கவல்லது என்பதை அறிந்து, அதனைப் பூசுவார்கள். ஆதலின் இம்முதியவர் நிச்சயம் திருநீறு அணிபவராக இருக்கலாம் என்று திருவுள்ளத்தெண்ணி, ஐந்தாவது கேள்வியையும் எழுப்பினார்.

''நாடோறும் நீராடிய பின்னர், திருநீறு அணிவதுண்டோ?'' — என்பது தான் ஐந்தாவது கேள்வி.

அதற்கும் அம்முதியவர் 'இல்லை' என்றே பதில் கூறினார்.

அப்பரடிகள் அம்முதியவர் மேல் இரக்கப்பட்டார்; இப்பெரியவர், தம் வாழ்க்கையில் இறைவனது கருணையை இழந்து விட்டார் என்று உள்ளங்கசிந்தார். இவர் நோய்கள் பலவும் நலியப் பிறப்பு என்னுஞ் சுழியிற்பட்டு இன்னும் பல [illegible] நிலையினைப் பெற்றுவிட

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சத்தை உருக்கிடும் நீங்காத
## 6 ஆம் மாத நினைவலைகள்

மறைவு:- 07 - 09 - 1996

### திருமதி இராசம்மா குமாரசுவாமி

அருமைக் குழந்தைகள்

### செல்வி கிருஷாந்தி குமாரசுவாமி
### செல்வன் குமாரசுவாமி பிரணவன்

மற்றும்

### சிதம்பரன் கிருபாமூர்த்தி

ஆகியோர் நினைவாக

உற்றார், உறவினராய் நாம் வாழ்ந்து
பிழைத்திருந்தோம், எம்மோடு உறவினராய்
சேவையே தம் பெரும் சேவையென்று
வந்து எம்மோடு கலந்து ஏழு ஒன்பதில்
எமைவிட்டுச் சென்ற தெய்வங்கள் உங்கள்
சோகமிக வாழ்வு எமைவிட்டு மாறாது!
எமைப் பிரிந்து ஆறுமாதமம்மா
ஆறாத் துயரம்மா!
ஆற்றுப்படுத்த இனி யாரம்மா?

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

''குமாராலய''
கைதடிச்சந்தி,
கைதடி.

(45401)



## சொல்லில் அடங்காத சோகமிகு
## 6 ஆம் மாத நினைவலைகள்



### செல்வி செல்வரத்தினம் றஜனி

(யாழ். இந்து மகளிர் கல்லூரி A/L 1995வர்த்தகம்)

அன்னை மடியில்: **19-10-1976**
வான் அசுரனின் பிடியில்: **21-08-1996**

அன்புத் தங்கைச்சியே ..!
பெற்றவர்கள் கதறிட
உடன் பிறந்தோர், உற்றார்,
உறவினர் கலங்கிட.
பொல்லாத நோய்வந்து
சொல்லாமல் கொண்டு சென்று
மாதங்கள் ஆறு சென்றனவே !
நம்ப முடியவில்லையம்மா
என்றும் உமது நினைவு எம்மைவிட்டு அகலாது!

உமது ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல நல்லூரானை வேண்டி, கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி. !!!

உமது பிரிவால் வாடும்:

அப்பா, அம்மா, உடன்பிறந்தோர்,
அப்பப்பா, அப்பம்மா,
சித்தப்பா இ. துரைசிங்கம் குடும்பத்தினர்.

அண்ணாமலை வீதி சுதுமலை தெற்கு,
மானிபபாய்.

இல. 50, 5ஆம் ஒழுங்கை,
அரசடி நல்லூர்.

(45376)


## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தை மீளப்புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்மேளனத்தை மீள இயங்கச் செய்து நன்கொடை பெறுதல், சமாசம் அமைத்தல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறும். (ஐ-3)

## நீண்ட...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஜனாதிபதியின் சுதந்திர தின உரை

ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்க, இலங்கையின் 49ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது உரையாற்றுகையில், விரைவில் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்று காணப்படும், என்று தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி தமது உரையில், சுதந்திர இலங்கையின் ஆரம்ப காலங்களில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளின் பிரதிபலன்களையே இன்றைய சந்ததியினர் எதிர்நோக்க வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் ஆட்சிக்கு வந்தோர் னகயாண்ட தவறான அணுகுமுறைகள் இன்று இலங்கையில் பூதாகாரமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளன என்பது உண்மையே.

ஆனால் கடந்தகால ஆட்சியாளர்கள் மட்டுமல்ல; இலங்கையில் பதவிக்குவரும் எந்தவொரு ஆட்சியாளருமே இனப்பிரச்சினை விடயத்தில் தவறான அணுகுமுறைகளையே கையாண்டு வருகின்றனர்.

### ஆட்சியாளர் விடும் ஒரே தவறு

ஒவ்வொரு தடவையும் பதவிக்கு வருவோர் நிலைமையை மேலும் மேலும் மோசமாக்கி விடுகின்றனரே தவிர, சுமுகமானதீர்வுகளுக்கு வழிவிடவில்லை.

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வை அரசியல் ரீதியாகவே காணமுடியும் என்று தாம் உறுதியாக நம்புவதாக ஆட்சியிலிருப்போர் கூறிவருகின்ற அதேசமயம், இராணுவ நடவடிக்கையை தாமாகவே அவ்வப்போது முன்னெடுத்து 'நீறுபூத்த நெருப்பாக' இருக்கும் நிலைமைகளைக் கூடத் தீப்பிழம்பாக்கி விடுகின்றனர்.

இந்நிலையில் தேர்தல்கள் மூலம் மக்களிடம் ஜனநாயக ரீதியாகப் பெறும் ஆணைகளை, இராணுவ ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்வதே ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் வாடிக்கையாக இருக்கிறது.

கடந்த தேர்தலில் சமாதானத்தை ஏற்படுத்த நாட்டு மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டனர் இன்றைய ஆட்சியாளர்கள்.

கடந்தகால ஆட்சியாளர்கள் பேச்சு மூலமாகச் சமாதானத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டனர் என்பதே பொதுஜன முன்னணியினரின் குற்றச்சாட்டாக அமைந்திருந்தது.

ஆனால் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலுக்கு மக்களைச் சந்திக்கும்போது, கடந்த தேர்தலில் மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஆணையை நிறைவேற்ற முடியாதவர்களாகவே ஆட்சியாளர்கள் முகம் காட்டுகின்றனர்.

சென்ற தேர்தலில் சமாதான முழக்கத்துடன் மக்களைச் சந்தித்த பொதுஜன முன்னணியினர் இந்த முறை வடக்கு - கிழக்கில் போர் முழக்கத்தைக் கேட்கச் செய்தபடிதான் மக்கள் முன் செல்கின்றனர். சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள [illegible]வையே இவை பலப்படுத்துகின்றன. ★

(நன்றி:- தினமுரசு)


## G. A. Q. (கலைமுதற்தேர்வு)
## Ist in Com. (வர்த்தகமுதற்தேர்வு)

### யாழ். பல்கலைக்கழகம் - வெளிவாரி (1998)

A/L இல் 3 பாடங்கள் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் ஆரம்பம்: 01 - 03 - 97**
(காலை 9 மணி)

விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்:

**S. அருள்நங்கை,**

### புதிய உயர் கல்லூரி,

**ஆரியகுளம் சந்தி, யாழ். நகர்.**

(45411)



## பிறீமா கோழிக்குஞ்சு

ஐந்து நாள்கள் நிரம்பிய பிறீமா லேமன் இன பேட்டுக்கோழிக்குஞ்சுகள் (வெள்ளை) விற்பனைக்குண்டு. கம்போறா, பவள் பொக்ஸ், ரணிக்கற் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்படும்.

முகவரி: **R. S. K கோழிப்பண்ணை**
"முருகபதி" உடுவில், சுன்னாகம்.
(உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி)

(45414)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 12 — 1936
மறைவு: 22 — 01 — 1997

### அமரர் செல்லர் ஆறுமுகதாஸ்

அன்பும், பண்பும், அறிவும் கொண்டு பாசப் பிணைப்பால் எம்மையெல்லாம் உருவாக்கி கண்ணை இமை காப்பதுபோல் காத்த அன்பு நாயகனே! பாசமிகு எந்தையே! நீர் எங்குசென்றீர்? 31 நாள்கள் ஓடிமறைந்தாலும் உம் நினைவு எம்மை விட்டு எந்நாளும் நீங்காது.

மனைவி, பிள்ளைகள்.

'திருக்கேதீஸ்வரி இல்லம்'
இணுவில் தெற்கு.

(45407)



## ஈராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 18 — 04 — 1942
விண்ணில்: 14 — 02 — 1995

### அமரர் தியாகராசா அரசரத்தினம்

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி, காரைநகர்)

திதி: 21 - 02 - 1997

எம் குடும்ப விருட்சத்தைத்
தாங்கி நின்ற விழுதே!
எமக்கு நல்லறிவூட்டி, நல்வழிகாட்டி
நின்ற கலங்கரை விளக்கமே!
அப்பா! கண்ணெதிரே நின்ற உங்கள்
முகம் எம் நெஞ்சிலாடுது
நீங்கள் கதைகள் கூறி மகிழ்ந்தது
எம் கண்ணில் தோன்றுது!
பொல்லாத காலனால் நீங்கள் காலமாகி
ஆண்டிரண்டு சென்றாலும்
ஆறாது எம்மிதயம்!

நித்தமும் உங்கள் நினைவுடன் வாழும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள்.

தொல்புரம்,
சுழிபுரம்.

(45343)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணத்தில்போர்க் காலச் சூழ்நிலை தீவிர மடைந்து உச்சக் கட்டம் என்று சொல்லுமளவுக்கு இருந்த காலம் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1995 இறுதி வரையுமாகும். ஆனால் அத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் கலை இலக்கிய நிகழ்வுகளுக்கும் இங்கு பஞ்சமிருக்கவில்லை.

ஒரு பகுதியில் எறிகணைகள் குண்டுகளைப் பொழிந்து மக்கள் மடிந்து கொண்டிருக்க, மறு பிரதேசத்தில் இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீடுகள், நாடக, நடன அரங்கேற்ற நிகழ்வுகள் நடந்தது உண்டு. இரவிரவாக நாடகங்களும், பட்டி மண்டபங்களும் நடந்தன; அவற்றைப் பார்த்தும் கேட்டும்சுவைத்து விட்டு மக்கள் நடுச்சாமத்திலும் வீடு திரும்பியது அப்போதைய இயல்பு வாழ்க்கையாக இருந்தது.

ஆனால் வலிகாமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒருவருட காலமாகியும் கலை இலக்கிய நிகழ்வுகள் மருந்துக்கும் இல்லை என்றாகி விட்டன. பெரும் தொய்வு நிலை உண்டாகியுள்ளது.

நகரில் இப்போது தான் இரண்டொரு நூல் வெளியீட்டு விழாக்கள் நிகழ ஆரம்பித்துள்ளன. நூல் எழுதுவது – பெறுமதியான, கனதியான, பயனுள்ள, அறிவு பெருக்க உதவும் நூல் எழுதுவது — கடினமான,காலம் விழுங்கும் பணி. அதனை அச்சிட்டு வெளியிடுவது என்பது பணத்தை விழுங்கி நூலாசிரியனைச் 'சிப்பிலி ஆட்டிவிடும்' சிரமம் நிறைந்த வாழ்க்கை அனுபவமாகி விடுகிறது.

எல்லாவற்றையும் விடக் கடினமானது நூல்களை விற்பனை செய்து நட்டத்தில் இருந்து தப்பிக் கொள்வது.

இத்தகைய சூழ்நிலையிலும் பின்னணியிலும் புத்தகங்களை ஆக்கி வெளியிடுவோர் துணிச்சல் மிக்கவர்களே.

ஈழத்தின் புகழ் பூத்தநாடகக் கலைஞர் வி. வி. வைரமுத்து குறித்த நூலின் வெளியீட்டு விழா இன்று நல்லூரில் நடைபெறுகிறது.

வைரமுத்து ஓர் உண்மையான பிறவிக் கலைஞன். கலைக்காகவே வாழ்ந்தவர். ஈழத்து அரங்கியலில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்தவர்.

இவற்றைவிடவும் மேலாக, யாழ்ப்பாணத்துக் கிராம மக்களின் அபிமானத்துக்குரிய கலைகளில் ஒன்றாக விளங்கிய இசை நாடகங்களை நகரத்து மக்களும் விரும்பிப் பார்க்கும் கலையாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

''தான் பயின்ற அரங்கின் கலைத்துவச் சாத்தியப்பாடுகள் முழுவதையும் வெளிக்கொணரும் திறன் வைரமுத்து என்ற கலைஞனிடம் இருந்தது. கலையும் சாதனமும் ஆற்றலும் சரிநிகராகச் சந்தித்த வரலாறு அது'' — என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறுவது போல, அவர் ஒரு கலை வரலாறு.

அந்த வரலாற்றை வருங்காலம் மறந்துவிடாமலும், எதிர்கால அரங்கியலுக்கு வழிகாட்டியாக அமையவும் அவர் குறித்த நூல் பெரிதும் உதவும் எனலாம்.

நூல் வெளியீட்டில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவிக்கும் என்றும் கலைஞர்கள் அறிஞர்கள் குறித்த ஆய்வில் புதிய பாங்கினை உருவாக்கும் என்றும் நம்பவைக்கிறது, ''நடிகமணி வி.வி. வைரமுத்து வாழ்வும் அரங்கும்'' என்ற நூல்.

# இராணுவச் சீருடையில் சென்றோர் ஐ. தே. க. வேட்பாளர் மீது தாக்குதல்

கொழும்பு, பெப். 21

புத்தளம் மாவட்டத்தில் உள்ள கறுவலகஸ்வெவ பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐ. .தே. க. வேட்பாளர் மற்றும் அவரது ஆதரவாளர்களை இராணுவச் சீருடையில் சென்றவர்கள் தாக்கினர் என கூறப்பட்டுள்ளது.

வேட்பாளரின் வீட்டுக்குள் புகுந்த அவர்கள் வேட்பாளரையும் அவரது ஆதரவாளர்கள் சிலரையும் கடத்திச்சென்று தாக்கினர். பின்னர் வேட்பாளரை மின்கம்பம் ஒன்றில் சட்டி வைத்தனர்.

ஏனையோரை மயக்கமடையும் வரை தாக்கி விட்டு அவர்களை ஒவ்வொரு இடத்திலும் போட்டுச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# வடக்கு - கிழக்கு பகுதி மக்களுக்கு ஐரோப்பிய ஆணைக்குழு உதவி

வடக்கு – கிழக்கு மாகாண மக்களுக்கு மனிதாபிமான மற்றும் அவசர உதவிகள் வழங்கும் திட்டத்தை ஐரோப்பிய ஆணைக்குழு மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் தங்கியுள்ள 5 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவ 5 கோடியே 13 லட்சம் ரூபாவை வழங்க ஐரோப்பிய ஆணைக்குழு முன் வந்துள்ளது.

ஜேர்மனியில் உள்ள ''ஜேர்மன் அக்றோ அக்சன்'' என்னும் தொண்டர் அமைப்பின் ஊடாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. 'சேவாலங்காபவுண்டேசன்' என்னும் இலங்கையில் உள்ள தொண்டர் அமைப்பு ஜேர்மன் தொண்டர் அமைப்புடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

இந்தத்திட்டத்தில் தற்காலிக கொட்டகை அமைத்தல், மலசலகூடம் அமைத்தல் உட்பட சமையல் பாத்திரங்கள் வழங்கல் ஆகியன இடம் பெற்றுள்ளன.

அதேநேரம்—கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுவோர் நலன்களைக் கவனிக்கவும்—

நோயாளர்களை கப்பல் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லவும் ஐரோப்பிய ஆணைக்குழு அண்மையில் நிதிவழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-150)

## கண்டியில் பாதுகாப்பு அதிகரிப்பு

உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் கண்டியில் . வன்செயல்கள் வெடிக்கலாம் என்ற தகவல்களையடுத்து பொலீஸாரின் ரோந்துப் பணி கண்டியில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடிகளைப் பொலீஸார் அமைத்து தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-150)

## வடமராட்சி பண்ணிசை போட்டி ரத்து

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வடமராட்சி மாணவர்களுக்காக வடஇந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த பண்ணிசைப்போட்டிக்கு மாணவர்கள் விண்ணப்பிக்காத காரணத்தினால் மேற்படி போட்டி ரத்துச்செய்யப்பட்டுள்ளது என்றும் —

வடமராட்சி தவிர்ந்த ஏனைய மூன்று நிலையங்களில் நடத்தப்படும் பண்ணிசைப் போட்டிகளில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கான இறுதிப்போட்டி மார்ச்மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோயிலில், மக்கள் நலன் வேண்டி நாளைமாசிமக சிவமகாயாகம் நடைபெறவுள்ளது

நாளை அதிகாலை 4 மணி தொடக்கம் முற்பகல்11மணி வரை சிவமகாயாகம் இடம் பெறும். அதன் பின்னர் அபிஷேகம், சுவாமி உலா, அன்னதானம் என்பன நடைபெறும்.

ஆறுமுகம் சுவாமிகளின் ஆசியுடன் சைவப் பெரியார்களும் வித்தகச் செல்வர்களும் இவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

★ ★ ★

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி கோயிலில் மாசிமக உற்சவம் நாளை காலை 10 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ஐ-15)

★ ★ ★

கொழும்புத்துறை, ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின்தேர்த்திருவிழாஇன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறும்,நாளை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட போதனாசிரியர் திரு. ச.விநாயகமூர்த்தி ''திருத்தொண்டின் நெறி'' என்னும் தலைப்பில் உரையாற்றுவார் (ஐ-173)

★ ★ ★

தொண்டமனாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை விசேட சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

## இந்திய அமைச்சாவை விஸ்தரிப்பு

இந்தியாவில் ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவை நேற்று விரிவுபடுத்தப்பட்டது.

தேசிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்த சைபுதீன் சோஸ் அமைச்சராகவும் ஜனதா தளத்தைச் சேர்ந்த வீரேந்திர குமார் துணை அமைச்சராகவும் நியமிக்சப்பட்டுள்ளனர். (இ-10)

# அகதிகளிடம் தவித்த முயல்; இதுதான் மனிதாபிமானமா?

## வாசகர் திருமுகம்

கப்பல் மூலம் வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் (அகதிகள்) சடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.பஸ் நிலையத்தில் இறக்கிவிடப்பட்டனர்.

அவர்கள் வந்து இறங்கியவுடன் மினிபஸ், ஆட்டோ, கார் ஆகியவற்றின் உரிமையாளர்கள் பலர் அவர்களை சூழ்ந்து கொண்டனர். ''எங்கே போகின்றீர்கள்? நாங்கள்உங்களை உரிய இடங்களுக்குக் கொண்டு போய் விடுகின்றோம்'' என்றெல்லாம் பரிந்து பேசுபவர்கள் போல் அவர்களை துளைத்து எடுத்தார்கள்.

வன்னியிலிருந்து புறப்பட்டு வவுனியாவில் 12 நாள்களும் திருமலையில் ஆறு நாள்களும் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தங்கியிருந்து — கப்பலில் உணவும் சரிவரச் சாப்பிட முடியாது களைப்புற்ற நிலையில் வாடி சோர்ந்து இங்கு யாழ்ப்பாணத்துக்கு தங்கள் சொந்த இடத்துக்கு வந்து சேர்ந்த — இந்த மக்களை தவித்த முயல் அடிப்பதைப் போல இந்த வாகனங்களின் உரிமையாளர்கள் பயன்படுத்துவதை அங்கு நின்ற பலர் வெறுப்புடன் அவதானித்தார்கள்.

''உங்களை வீடுகளுக்குக் கொண்டு போய்விடுகிறோம்'' என்று சொல்லி மிகவும் அதிகரித்த சட்டணத்தை கேட்க ''பக்கத்தில் யாழ். பஸ் நிலயத்தில் குறைந்த கட்டணத்தில் நிற்கும் பஸ்ஸில் போகலாம் தானே'' என்று சிலர் பதில் சொன்னார்கள்.

''அங்கு இராணுவ 'செக்கிங்' நடக்கிறது. இங்குசுற்றி வளைப்பு நடக்கிறது. நீங்கள் எப்படிப் போவீர்கள்? நாங்கள் வேறு பாதையால் உங்களைக் கொண்டு சென்று விடுகின்றோம்'' என்று கூறி தங்கள் வாகனத்தில் ஏறுமாறு நச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

யாழ். நகரிலிருந்து சுழிபுரம் போக நின்ற ஒரு தாயையும் இரு பிள்ளைகளையும் நோக்கி ஒரு கோஷ்டி கேட்டது ''ஆட்டோவில் கொண்டு போய் விடுகின்றோம். 500 ரூபா தாருங்கோ'' என்று.

இதேவேளை அப்பாதையில் செல்லும் மினிபஸ்ஸில் அவர்கள் மூவரும் 60 ரூபாவுடன் பயணம் செய்ய முடியும். தற்போது இங்கு டீசல் விலை, மண்எண்ணெய் விலை மிகவும் குறைந்துள்ள நிலையில் இப்படி இவர்கள் நடந்து கொள்வது மனிதப் பண்புக்கு மாறுபட்டது. இருந்துவார்களா இவர்கள்?

மா. சுப்பிரமணியம்

கந்தர்மடம்.

## கணித அளவையியல் பிரிவுக்கு 9 பேர்

வடமராட்சி,பெப். 21

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கணித அளவையியல் பிரிவுக்கு ஒன்பது தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு;

★ க. ஜெயப்பிரகாஷ் — தெகிவளை.

★ என். ஜெயசிறிதரன் — மருதங்கேணி தெற்கு.

★ எஸ். இரத்தினவேல் — இடைக்காடு.

★ என் .எஸ்.நிர்மலநாதன் —சுண்டுக்குளி.

★ ஆர். சருணாகரன் — புலோலி மேற்கு.

★ ரி. செந்தில்குமார் — வெள்ளவத்தை.

★ ரி. சுஜீவன் — இருபாலை.

★ எஸ். சத்தியதாசன் — அராலி வடக்கு.

★ என். அருள்லிங்கம் — எழுதுமட்டுவாள்.

இத்தெரிவு நடைபெறும் கல்வியாண்டுக்குரியதாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

## உயர்ந்த...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாரே என்று இரங்கினார். பின்னர் அடிகள் முதியவரை விழித்து, எஞ்சிய வாழ்நாளிலாவது சமய நெறிப்படி வாழ்ந்தால் நற்கதி பெறலாம் என்று அறிவுறுத்தியதை அவர் அருளிய திருத்தாண்டகத்தால் அறியலாம்.

திருநாமம் அஞ்செழுத்தும்
செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால்
பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில்
சூழா ராகில்
உண்பதன்முன் மலர்
பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ
றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா
றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப்
பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி
இறக்கின் றாரே.

### பிறவி தீங்க

இவ்வைந்து கேள்விகளையும் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுக் கொள்ள வேண்டும். கடவுள் வழிபாட்டைத் தங்கள் கடமைகளுள் ஒன்றாகக் கருதி வாழ்பவரே பிறவா நெறியாம் பேரின்ப வாழ்வு பெறுவர். இறைவன் திருவடிகளை வழிபடுவதும், ஆசையை அகற்றி வாழ்வதுமே பிறவியறுதற்குரிய வழிகளாகும், ஆசை அறுதற்குரிய எளிய வழி பற்றற்ற இறைவன் திருவடிகளின் மீது பற்றுக் கொள்வதேயாகும் என்பார் திருவள்ளுவர்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்பது அவர் வாக்கு.

அன்பர்கள் அனைவரும் இறைவன் திருவருட்பேற்றை எய்துவதற்குரிய வழிபாடுகளை நியமமாகச் செய்து இம்மையின்பங்களையும் என்றும் வற்றா முற்றாகப் பேரின்பப் பெருவாழ்வினையும் பெற்றுச் சிறக்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம். ★

## நாளை

**மாசி 11**

சனிக்கிழமை

**திதி:** பூரணை
பிற்பகல் 4- 38 வரை.

**நட்சத்திரம்:** மகம்
முன் இரவு 11-07 வரை.

மாசிமகம்,பூரணைவிரதம்

**ராகுகாலம்:** 9.31-11.01

**சுபநேரம்:** 3.31 - 5-01
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஆட்லறித் தாக்குதலை எப்படி எதிர்கொள்ள முடியும்?

## பாதுகாப்பு வட்டாரங்கள் ஆராய்வு

கொழும்பு, பெப். 21

வவுனியா நகர் மீது விடுதலைப் புலிகள் ஆட்லறித் தாக்குதல் மேற்கொள்ளும்போது அதனைச் சமாளிக்கும் நடவடிக்கைகள், யுக்திகள் குறித்துப் பாதுகாப்பு உயர் மட்டத்தில் ஆராயப்பட்டது.

இப்படி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தம் வசம் உள்ள ஆட்லறிகள் மூலமாக வவுனியா நகரில் உள்ள படை முகாம்கள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து படையினர் பதுங்குகுழிகளை அமைக்கத் தொடங்கியுள்ளனர்.

அதேநேரம் வவுனியா, ஆனையிறவு, கிளிநொச்சி, பரந்தன் முகாம்களில் இருந்து படையினர் ஆட்லறித் தாக்குதல் நடத்துவதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர் —

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(இ-3-150)

## திம்புலகல பிரதேச சபை

# ஐ. தே. க. முதன்மை வேட்பாளர் றிவோல்வருடன் கைதானார்!

கொழும்பு, பெப்ரவரி 21

திம்புலகல பிரதேச சபைக்கான தேர்தலில் ஐ. தே. க. முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் ஒருவர் றிவோல்வருடன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

வடமத்திய மாகாண சபையின் உறுப்பினராகப் பணியாற்றிய சமயம் அவருக்குப் பாதுகாப்புக்காக இந்த றிவோல்வர் வழங்கப்பட்டிருந்தது.

அவர் மாகாண சபை உறுப்பினர் பதவியை இழந்த பின்னரும் பொலீஸாரிடம் றிவோல்வரை கையளிக்காமல் இருந்துள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

றிவோல்வருடன் அவரிடம் இருந்து 5 ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

(இ-3-150)

# எடிபல இராணுவ நடவடிக்கை தொடருவதாக அறிவிப்பு

கொழும்பு, பெப். 21

''எடிபல'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தொடர்ந்து முன்னேறுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினரின் முன்னேற்றத்துக்கு சிறிதளவு எதிர்ப்பே இருந்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மடுச்சந்தியில் இருந்து மன்னார் நோக்கிப் படையினர் சென்று கொண்டிருப்பதாகவும் —

முருங்கன் நகரை படையினர் அண்மித்துள்ளதாகவும் — ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இராணுவத் தளபதி றோகான் தளுவத்த படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்கு விஜயம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை—முன்நோக்கி வரும் படையினர் மடுவில் உள்ள அகதி முகாம்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தக் கூடாது என்று அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமும், எம். எஸ். எவ். மருத்துவக் குழுவும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

13ஆயிரம் அகதிகள் தங்கியுள்ள மடு அகதிமுகாமை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் 1990 ஆம் ஆண்டுமுதல் நிர்வகித்து வருகிறது. எம். எஸ். எவ். இந்த முகாமில் உள்ளவர்களுக்கு மருத்துவ உதவியை வழங்கி வருகிறது.

(இ-3-10)

# வாழைச்சேனைப் பகுதியில் நால்வருக்கு மேல் கூடத் தடை!

வாழைச்சேனைப் பகுதியில் நான்கு பேருக்கு மேல் வீதியில் கூடி நிற்க பொலீஸார் தடை விதித்துள்ளனர்.

வாழைச்சேனை தமிழ் — முஸ்லிம் எல்லைப் பகுதியில் உருவான பதற்ற நிலையைத் தணிக்கும் பொருட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலீஸார் துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்துள்ளனர்.

(இ-3)

# நாலந்தாவின் இடத்துக்கு கம்யூனிஸ்ட் உறுப்பினர்

கொழும்பு, பெப். 21

சுட்டுக் கொல்லப்பட்ட நாலந்தா எல்லாவெலவின் இடத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சிபிரமுகர் சட்டத்தரணி டி. எம். செனிவிரத்ன நியமிக்கப்படவுள்ளார் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரத்தினபுரி மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பட்டியலில் கொல்லப்பட்ட நாலந்தா எல்லாவெலவுக்கு அடுத்ததாக டி. எம். செனிவிரத்தின இருந்தார்.

(இ-3)

# அகதிகள் அல்லாத 3 ஆயிரம் பேர் யாழ்.வர திருமலையில் தவம் கிடப்பு

கொழும்பு, பெப். 21

தேசிய புலனாய்வுப் பணியகத்தின் அறிக்கை கிடைக்காததால் யாழ்ப்பாணம் செல்லமுடியாத நிலையில் அகதிகள் அல்லாத சுமார் மூவாயிரம் பயணிகள் திருமலையில் காத்திருப்பதாக திருமலைப் பட்டனமும், சூழலுக்குமான பிரதேச செயலர் வேலும்மயிலும் தெரிவித்தார்.

இவர்கள் திருமலையில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

யாழ். செல்வதற்காகப் பதிவு செய்தவர்களில் இன்னும் 50 பேரே திருமலையில் உள்ளனர்.

வவுனியாவில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல அகதிகளுக்கு மட்டுமே கப்பலில் இடம் அளிக்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஏற்கனவே பணித்திருந்தது தெரிந்ததே.

(இ-3)

### வன்முறைச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. தே. க. ஆதரவாளர்கள் மத்தியில் இருந்து வரும் பழிவாங்கும் மனப்பான்மையே வன்செயல்கள் அதிகரிக்கக் காரணம் என்று நம்பப்படுகிறது.

தேர்தல் நெருங்க, நெருங்க வன்செயல்கள் மேலும் அதிகரிக்கலாம் என்றும் —

வடக்கு – கிழக்கில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தெற்கில் உள்ள பொலீஸாரை மட்டும் பயன்படுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அரசு பெரும் சவால்களை எதிர்நோக்கலாம் என்றும் வெகுஜன தொடர்பு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

(இ-3-10)

# பட்டதாரி ஆசிரியர்-அதிபர்களுக்கு மீளாய்வுச் சம்பளம் நிறுத்தம்

கொழும்பு, பெப். 21

பட்டதாரி ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கு புதிய சம்பளத்திட்டத்தை அமுல் செய்வதை உடன் நிறுத்துமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சுச் செயலாளர் உபசேனசேனநாயக்கபிரதேச காரியாலயங்களை கேட்டுள்ளார்.

ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை மாற்றியமைக்கும் சுற்றறிக்கை இல. 2/97 கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த சுற்றறிக்கையில் பட்டதாரி ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கும் சம்பளத்தை மீளமைப்பது குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பள மீளமைப்பையே நிறுத்துமாறு தற்போது பணிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரி ஆசிரியர்களிடு சம்பளம் 97 ஆம் ஆண்டுத் தொடக்கம் வேறு சுற்றறிக்கையின்படி மாற்றியமைக்கப்படவுள்ளதாலும் —

புதிய சம்பளத் திட்டத்தில் அதிபர்களை உள்வாங்குவதில் சிக்கல்கள் இருப்பதாலும் — இத்தகைய அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தொடர்பான மற்றொரு சுற்றறிக்கைவிரைவில் வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### தேடப்பட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைந்தது தெரிந்ததே இவர் பற்றிய தகவலுக்கும் 10 லட்சம் ரூபா வழங்கப்படும் என்று பொலீஸார் அறிவித்திருந்தனர்.

இரத்தினபுரி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சுஸந்த புஞ்சிநிலமே மஹர விளக்கமறியல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம் நாலந்தா எல்லாவெல மற்றும் ஒரு பொலீஸ் சார்ஜன்ட் கொலைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் நேற்று இரத்தினபுரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருந்தனர்.

ஆனால் அவர்களுக்கு தேவையான பொலீஸ் பாதுகாப்பை வழங்க முடியாது போனதால் சந்தேக நபர்கள் ஆஜர் செய்யப்படவில்லை.

சகல சந்தேக நபர்களையும் இம்மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் —

அதற்கு தேவையான பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் — சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு இரத்தினபுரி பிரதம நீதிவான் அநுரரணசிங்க உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகள் சம்பந்தமாக சில இடங்களுக்கு சந்தேக நபர்களை அழைத்துச் செல்ல அனுமதி வழங்குமாறு சி. ஐ. டியினர் விடுத்த வேண்டுகோளை நீதிவான் ஏற்றுக் கொண்டனர்.

சம்பந்தப்பட்ட அறிக்கைகள் சமர்பிக்கப்பட்ட பின் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் அவர் கூறினார்.

சந்தேக நபர்களை தடுத்து வைப்பதற்கான உத்தரவு நேற்றுடன் முடிவடைந்ததால் ஹல்ஸ்ரோப் நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை ஆஜர் செய்யவேண்டும் என்றும் —

27 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்கவேண்டும் என்றும்— வெலிக்கடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இரண்டு ரி56 ரக ஆயுதங்களையும், 676 சன்னங்களையும் அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்து அறிக்கை பெறப்பட வேண்டும் என்று சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அபேகோன் விடுத்த வேண்டுகோளையும் நீதிமன்றம் ஏற்று உத்தரவிட்டது.

(இ-3)

# முன்னாள் சார்ஜண்ட் வீட்டில் நள்ளிரவில் துணிகரக் கொள்ளை

## கந்தரோடைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 21

வீட்டில் தனிமையில் இருந்தவரைக் கட்டிப் போட்டுவிட்டுப் பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிறன்று கந்தரோடை பருத்தியோலைப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இளைப்பாறிய பொலீஸ் சார்ஜண்டான சின்னப்பு முருகேசு என்பவரது வீட்டினுள் இரவு ஒரு மணியளவில் நுழைந்த இனந் தெரியாதவர்கள் தம்மைப் புலிகள் என்று கூறிக்கொண்டு அவரின் கை, கால்களைக் கட்டி, வாயில் துணி அடைந்தனராம்.

பணமாக 22 ஆயிரம் ரூபா மற்றும் தங்க நகைகள், மணிக்கூடு ஆகியவற்றை அவர்கள் கொள்ளையடித்துச் சென்றனர்.

இது தொடர்பாக சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-3)

# இந்திய தரம் குறைந்த மருந்துகள் திடீர்பரிசோதனையில்கண்டுபிடிப்பு

யாழ். நகரிலுள்ள மருந்தகங்கள் (பார்மசிகள்) சிலவற்றில் இலங்கை அரசாங்கமருந்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத — இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட தரம் குறைந்த — நிலையிலுள்ள மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது திடீர் பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மருந்தகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட போது மேற்படி தரம் குறைந்த மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அவை கைப்பற்றப்பட்டன.

இதே வேளை சில மருந்தகங்களில் திகதி காலாவதியான மருந்துக் குளிசைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இம் மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(இ-135)

# வைத்தியர் இல்லாது இயங்கும் நயினாதீவு ஆஸ்பத்திரி

## நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், பெப். 21

நயினாதீவில் அரசினர் வைத்தியசாலை ஒன்று உள்ள போதும், அங்கு டாக்டர்கள் இல்லாதிருப்பதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பெரும்பாலான நோயாளர் ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்துக்குமே செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட வைத்திய அதிகாரி, உதவி வைத்திய அதிகாரி, பற்சிகிச்சை நிபுணர், குடும்பநல சேவையாளர் ஆகியோருடன் இயங்கி வந்த நயினாதீவு சுற்றியல் கூறு வைத்தியசாலை நீண்டகாலமாக, ஒப்பந்த அடிப்படையில் கடமை செய்யும் ஒரு டாக்டருடனும், ஒரு குடும்பநல சேவையாளருடனும் இயங்கி வந்தது.

அந்த குடும்பநல சேவையாளர் கடந்த இரு மாதங்களுக்கு முன் இளைப்பாறி ஒரு டாக்டருடன் அது இயங்கி வந்தது.

அந்த டாக்டரும் சுகயீனம் காரணமாக விடுமுறையில் இருந்து வருகிறார்.

(இ-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org